## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடற்றொழிலாளர் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து கடற்றொழிலாளர் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்று உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அதனுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்லூரியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது கல்லூரியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் எனபவற்றிற்கு முகாமைத்துவத்தும் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வது எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாரள அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோளாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மெற்கொள்ளப்படும் பொருளதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்கு செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காயிவின் பகுதியொன்றாக, கணக்காயிவின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீட்டு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றை கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருன்மையான நிச்சியமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணப்பாய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாக காணப்டுகின்றன. எவ்வாராயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்லூரியின் தொடர்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதினை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பினிவரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிமைக்கப்பட்ருபடபதனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக செய்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,
- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செய்ற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்மான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்க பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
|---|---|---|
| நியமம் 37 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் செய்படும் பங்களிப்புகள் மற்றும் கடற்றொழில் ஒய்வு பெற்றோர்களின் ஓய்வூதியங்களின் பொறுப்புகளுக்காக காப்பீட்டு கணிப்பு மதிப்பீடானது காலநீதியாக மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2018 டிசபர் 31 இல் உள்ளவாறு ஓய்வூதியப் பொறுப்புகள் அவ்வாறான காப்பீட்டு கணிப்பீட்டு மதிப்பீடு செய்யப்படாது ரூபா 3590887004 ஆக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2007 ஆம் ஆண்டின் போது கடற்றொழிலாளர் ஓய்வூதிய திட்டத்தின் பொறுப்புகள் தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட காப்பீட்டு மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஓய்வூதியப் பொறுப்பு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்த ஓய்வூதியத் திட்டமானது சுய நிதியை அடிப்படையாக கொண்டதல்லாததனால் எதிர்காலத்தில் இத் திட்டத்தினை மீளமைப்புச் செய்து உரிய முறைப்படி பொறுப்பினை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஓய்வூதியப் பொறுப்புகளுக்காக காப்பீட்டு கணிப்பு மதிபடபீடானது கால நீதியாக செய்யப்படுதல் வேண்டம். |

### 1.5.2 திட்டம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஓய்வூதிய பொறுப்பு ரூபா 3590887004 ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டினை விட 8.9 சதவீதத்தால் அதிகரிப்பாகும். இத்திட்டத்தின் கடற்றொழிலாளர் ஓய்வூதிய திரண்ட நிதியத்தில் 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மறை நிலைமையாகனது ரூபா 2,947,927,045 வரை அதிகரித்திருந்தனால் அதன் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல் தொடர்பாக பாதகமான தாக்கத்தை ஏற்படுதியுள்ளது மேலும் எதிர்வரும் ஆண்டுகளின் போது இந்நிலைமை மேலும் அதிகரிக்க கூடியதாக இருந்ததனால் திட்டத்தை மீளமைப்புச் செய்து நிதி சாத்திய வளத்துடன் நிறுவனம் இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடற்றொழில் ஓய்வூதியத்தின் எதிர்காலப் பொறுப்பை கணக்கீட்டு நியமனத்திற்கு இணங்க நிதி அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் சாத்திய வளமின்றி அரசாங்கத்தின் உதவியினை அடிப்படையாக கொண்ட ஒரு திட்டமாக இருப்பதனால் இவ்வாறு எதிர்காலப் பொறுப்பு அதிகரித்துள்ளது. இத் திட்டத்தினை மீளமைப்பு செய்வதற்காக தற்பொழுது நியமிக்கப்பட்டுள்ள அறியலாளர் குழுவின் சிபாரிசு பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தை மீளமைப்புச் செய்து நிதி சாத்திய வளத்துடன் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற | மீண்டெழும் தன்மையிலான மூலதன மானியம், இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மைகள்.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|---|
| 1990 இன் 23 ஆம் இலக்க கடற் றொழிலாளர் ஓய்வூதிய மற்றும் சமூக நலன் திட்ட அதிகார சட்டம் (அ) 16 ஆம் பிரிவு | | | |
| | பங்களிப்பாளர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள சான்றிதழின் கீழ் நலன்கள் இழக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அத பற்றிய அறிவித்தலினை அப்பங்களிப்பாளருக்கு வழங்கப்படுதல் வேண்டும். அவ்வாறு தெரியப்படத்தாததன் காரணமாக தவணைப் பணம் | தொடர்ச்சியாக 10 தவணைப் பணங்களை செலுத்தாத பங்களிப்பாளர்களின் பங்களிப்பு இரத்து செய்யப்படும் என திட்டத்திற்கு சேர்த்துக் கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் கடற் றொழிலாளர்களுக்கு | நலன்கள் இழக்கப்படும் சந்தர்ப்பத்தில் அது பற்றிய அறிவித்தல் அப்பங்களிப்பாளருக்கு வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தாததன் அடிப்படையில் இரத்து செய்யப்பட்ட சான்றிதழை மீண்டும் செல்லுபடியாக்குவதற்கு மீளாய்வாண்டின் போது 35 அங்கத்தவர்களுக்கு இருந்த சந்தர்ப்பம் இல்லாம் போயிருந்தது. | ஏற்கனவே தெரியப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அவ்வாறு பங்களிப்பை இரத்து செய்வது தொடர்பாக தெரியப்படுத்தல் கடற்றொழில் திணைக்களத்தின் மூலம் இடம் பெறுவதுடன் பங்களிப்பு இரத்து செய்யப்பட்டவர்களுக்கு கடற்றொழில் திணைக்களத்தின் மாவட்ட அலுவலகத்தின் மூலம் புதிய பங்களிப்பாளராக மீண்டும் கடற்றொழிலாளர் ஓய்வுதிய திட்டத்திற்கு பங்களிப்புச் செய்யக் கூடியதாக உள்ளது. | |
| (ஆ) 20 ஆம் பிரிவு | சபையின் ஆலோசனை சபையானது 12 அங்கத்தவர்களை உள்ளடக்கியிருக்க வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டிற்காக 9 அங்கத்தவர்கள் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தார்கள் | விவசாய கடற்றொழில் சமூகங்களுக்காக புதிய ஓய்வூதியத் திட்டங்களை ஆரம்பிப்பதற்காக தற்பொழுது அமைச்சரவைக்கு அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் இத்திட்டம் பகுப்பாய்வு செய்யப்பட்டு அமைச்சரவைக்கு ஆலோசனை வழங்குவதற்காக அறிவியலாளர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதற்கு இணைவாக சபையின் ஆலோசனை சபைக்கு நியமிக்கப்படாத அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டு அச்சபை கூடி இப்பிரேரணையைச் சமர்ப்பிப்பதற்கு எதிர்பாக்கப்பட்டுள்ளது.<br><br>நீண்ட காலமாக கடற்றொழிலாளர் ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்ப படிவங்களை சமர்ப்பிப்பதற்கு தாமதித்த கடற்றொழிலாளர்களுக்கு நிலுவையான ஓய்வூதியங்களை செலுத்தும் போது அவ்வாறு | அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டு முறையாக கூட்டங்களை நடாத்துவற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) 7(1) ஆம் பிரிவு | 60 வயது பூர்த்தி செய்த திகதியிலிருந்து கடற்றொழிலாளர் ஓய்வூதியத்திற்காக தகமையுள்ள ஆனால் ஓய்வூதியம் தயாரித்த திகதியிலிருந்து ஓய்வூதியம் மேற்கொளள்ளப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2011 சபையிலிருந்து ஓய்வு பெற்ற 95 கடற்றொழிலாளர்களுக்கு 2017 சபையிலிருந்து 2016 டிசம்பர் வரையான காலத்திற்காக செலுத்த வேண்டிய ரூபா 2,793,811 ஓய்வூதியத்தை மீளாய்வாண்டின் இறுதி வரை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாமதித்தமைக்கான காரணத்தை தேடிப் பார்த்ததன் பின்னர் கொடுப்பனவு செய்யும் போது பழைய ஓய்வூதிய நிலுவைகளைச் செலுத்துதல் தற்காலிகமாக நிறுத்தப்படபதன் காரணமாக இந்நிலைமை உருவாக்கியுள்ளது. யுத்தம் நடைபெற்ற மாவட்டங்களிலுள்ள கடற்றொழிலாளர்கள் விண்ணப்பிக்கும் போது அதிகளவு தாமதம் ஏற்பட்டதனால் அவ்வாறு தாமதமடைந்தமைக்கான காரணத்தை கிராம உத்தியோகத்தர் மற்றும் பிதேச செயலாளரை உள்ளடக்கிய மாவட்ட அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்து அது தொடர்பான உறுதிப்படுத்தலைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் உரிய பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கபடும். | நிலுவை ஏற்படாத வகையில் 60 வயது பூர்த்தியடைந்த திகதியிலிருந்து ஓய்வூதியத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கு திட்டத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிருந்து ரூபா 28,891,441 மிகை ஏற்பட்டிருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 28,891,441 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கபன நிதி விளைவுகளில் ரூபா 26,643,890 அதாவது 92 சதவீத குறைவு அவதானிக்கப்பட்டுள்ளது. முன்னைய ஆண்டின் போது இலங்கை வங்கிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட ஒரு வழக்கு சபைக்கு சாதகமாக தீர்ப்பளிக்கப்பட்டதனால் கிடைக்க வேண்டிய பணத்தில் ஒரு பகுதியான ரூபா 37,672,911 முன்னைய ஆண்டின் போது சபைக்கு கிடைத்தல் மேற்கூறிய மிகை ஏற்படுவதற்கான பிரதான காரணமாக இருந்தது.

**3. கணக்கின் தன்மையும் நல்லாட்சியும்**

**3.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் போது கடற்றொழிலாளர்களைப் புதிதாகச் சேர்த்துக்கொள்ளல் 100 ஆக காட்டப்பட்டிருந்ததும் உள்ளபடியான சேர்த்துக்கொள்ளல் 4 பேர் மாத்திரமாகும். அது இலக்கிடப்பட்ட அளவில் 97 சதவீதம் வீழ்ச்சியாகும். அதனை 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 97 சதவீதம் வீழ்ச்சியாகும். | புதிய ஓய்வூதிய திட்டத்தினை தயாரிப்பதற்கு நிபுணர் குழுவிற்கு அனுப்பி ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென மேன்தகைய ஜனாதிபதி அவர்களும் பிரதம மந்திரி அவர்களும் அவதானிப்புகளை சமர்ப்பிப்பதனால் அக்குழு கூடியதன் பின்னர் புதிய அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு இணங்க ஓய்வூதியத் திட்டத்தை மீளமைப்புச் செய்து புதிய ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்கு எதிர்பாக்கப்பட்டுள்ளது. | ஓய்வூதிய திட்டத்தின் குறிக்கோள்களின் பிரகாரம் அங்கத்தவர்கள் தொடர்ச்சியாக சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |